# உங்களைப் பாதுகாத்தல்

வேலைத்தலத்தில் உங்களது உரிமைகள் மறுக்கப்பட்டால், அதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொள்வது முக்கியமாகும். உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கீழே தரப்பட்டுள்ள சரிபார்க்கும் பட்டியலை பயன்படுத்துங்கள். உங்களைப் பாதுகாக்க, உங்களுக்கான கொடுமதிகளை அறவிட, புகார்களைப் பதிவு செய்ய, உங்களுக்குச் சேரவேண்டிய நன்மைகள் மற்றும் உரித்துக்களுக்குத் தகுதிபெற இந்தத் தகவல் உதவி செய்யும்.

## ஊழியர்களுக்கான சரிபார்க்கும் பட்டியல்

- ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன் வாசிப்பதற்குப் போதிய நேரத்தினைக் கேட்கவும். வாசிக்காமல் ஒப்பமிடும்படி உங்களது மேலதிகாரி வற்புறுத்தினால் ஒரு பிரதியினைப் பெற்றுக் கொள்ளவும் அல்லது போட்டோ ஒன்றினை எடுத்து வைத்துக் கொள்ளவும். பெற்றுக் கொள்கின்ற ஏதாவது ஒப்பந்தங்களின் பிரதிகளைப் பேணி வைத்துக் கொள்ளவும்.
- ஒவ்வொரு நாளும் ஆற்றும் வேலையினது திகதி, மணித்தியாலங்கள் மற்றும் பணி விபரங்களை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் தகவல்களை உங்களது வீட்டில் பேணி வைத்துக் கொள்ளல் நல்லது.
- உங்களிடம் சமூகக்காப்புறுதி எண் (SIN) அல்லது வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாதவிடத்து அல்லது உங்களுக்குரிய சம்பளம் நேரடிப்பணமாக(கைக்காசாக) வழங்கப்பட்டால், வேலை செய்த திகதிகள், மணித்தியாலங்கள், பெற்றுக் கொண்ட பணத்தொகை போன்ற தகவல்களை எழுதி வைத்துக் கொள்ளவும். தொழில்புரியும் தொழிலாளர்களுக்குரிய சட்டம் (ESA) உங்களுக்கு ஏற்புடையதாகும்.
- உங்களுடைய மேலதிகாரி மற்றும் கம்பனி தொடர்பான பெயர், வேலைத்தலைப்பு, வேலை விபரங்கள், வீட்டுவிலாசம் மற்றும் வாகன இலக்கத்தகடு என்பவைகளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கும் தொழில்தருநர்களுக்குமிடையிலான தகவல் பரிமாற்றங்கள், செல்லிடத் தொலைபேசி தகவல் பதிவுகள், மின் அஞ்சல், தொலைபேசி அழைப்புக்கள், கடிதங்கள் போன்றவற்றின் பிரதிகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களது உரிமைகள் தொடர்பாகக் கதைத்தபடியால் உங்களை வேலையிலிருந்து நீக்குவது சட்டவிரோதமானதாகும். அவ்வாறு நீங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தால் எவ்வாறு, எப்போது வேலை நீக்கம் இடம் பெற்றது தொடர்பான விடயங்களை எழுதி வைத்துக் கொள்ளவும். உங்களது மேலதிகாரி உங்களைத் தொந்தரவுப் படுத்துவதன் மூலம் நீங்களாகவே வேலையினை விட்டு போகச் செய்ய முடியும். அப்படியாயின் தொந்தரவு தொடர்பான விடயங்களை எழுதி வைத்துக் கொள்ளவும்.
- நீங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலோ, வேலையிலிருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாலோ அல்லது பணிநிறுத்தம் செய்யப்பட்டிருந்தாலோ தொழில் காப்புறுதிக்கு (EI) நீங்கள் உரித்துடையவர். உங்களால் பேணப்பட்ட விபரமான தகவல்கள் தொழில்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது உதவியாக இருக்கும்.
- தொழில்தருநரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு பத்திரத்தின் பிரதியினையும் அதாவது ஒப்பந்தம், சம்பளச்சிட்டை (Pay stub), காசோலை, தொழில் விபரப்பதிவு (ROE), பணி நிறுத்தக்கடிதம் போன்றவைகளைப் பேணிக் காக்கவும்.
- அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்கின்ற ஒவ்வொரு கடிதத்தின் பிரதியினையும் அதாவது தொழிலகப் பாதுகாப்பும் காப்புறுதிக்குமான சபைக்காக (WSIB) அல்லது தொழில் காப்புறுதிக்காக (EI) நிரப்பப்பட்ட பத்திரங்கள் பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டும்.
- லீவு எடுப்பதற்காக (சம்பளத்துடன் கூடிய / சம்பளமற்ற லீவு), அல்லது காயமடைந்தால் அல்லது சுகயீனமடைந்தால் உங்களை பணிநீக்கம் செய்ய முடியாது. அவ்வாறு உங்களுக்கு இது ஏற்படுமாயின், உங்களது மேலதிகாரி கூறும் யாவற்றையும் எழுதி வைத்துக் கொள்ளவும்.
- உங்களது உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என நீங்கள் நினைப்பீர்களாயின், உதவி பெறும் பொருட்டு தொழிலாளர் நடவடிக்கை நிலையத்தினை அழையுங்கள்.